**Subject Code : 04**

**March, 2014**

# TAMIL

*Time : 3 Hours 15 Minutes* ] [ *Total No. of Questions : 50* ] [ *Max. Marks : 100*

***மாணவர்கள் கவனிக்க :***

i) வினாக்களின் எண்களைச் சரியாக குறிப்பிடவும்.

ii) விடைகள் தெளிவாக இருத்தல் வேண்டும்.

iii) மதிப்பெண்களுக்கு ஏற்றவாறு விடையளிக்கவும்.

## பகுதி - I

ஒரு வரியளவில் விடை தருக : 10 × 1 = 10

1. வைகையில் தவழ்ந்த பேதை யார் ?
2. புகழுக்காக உயிர் கொடுப்பவர் யார் ?
3. இளமைப் பருவத்தில் எதைச் செய்யாதது குற்றம் ?
4. யாருடைய முகம் இன்னும் புன்னகையோடு இருப்பதாக வாலி கூறுகிறார் ?
5. முதன்முதலில் கற்கோயிலை அமைத்தவர் யார் ?
6. சுவைமிக்க வெற்றிலை எப்போது கிடைக்கும் ?
7. கோப்பெருஞ்சோழனின் அரசவையில் இருந்த புலவர்கள் பெயர்களைக் குறிப்பிடுக.
8. அப்துல் கலாம் அவர்களின் தந்தை பெயர் என்ன ?
9. திப்பு சுல்தானின் ராணுவத்தில் இருந்த ராக்கெட் ஏவும் வீரர்கள் அடங்கிய அணியின் பெயர் என்ன ?
10. அப்துல் கலாமின் நீண்டகாலக் கனவான 'ரெக்ஸ்' திட்டத்திற்கு வைக்கப்பட்ட பெயர் என்ன ?

## பகுதி - II

அ. எவையேனும் **நான்கு** வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை தருக : 4 × 2 = 8

11. கடலுள் மாய்ந்த இளம்பெரு வழுதி பற்றிக் குறிப்பு வரைக.
12. பெருக்குக, தருக்குக, அருக்குக, சுருக்குக என்று விளம்பி நாகனார் விளம்புவனவற்றைக் கூறுக.
13. குந்தியிடம் அசரீரி கூறிய செய்தி யாது ?
14. பாண்டிய நாட்டின் வளம் முத்தொள்ளாயிரத்தில் எவ்வாறு கூறப்பட்டுள்ளது ?
15. பூமி தன்னில் யாங்கணும் பிறந்ததில்லை என்று யார் யாரைப் பாரதியார் குறிப்பிடுகின்றார் ?

ஆ. எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை தருக : 3 × 2 = 6

16. ரோம் நாட்டு மக்கள் உல்லாசமளிக்கும் ஓய்வாக எவற்றைக் கருதினர் ?

17. மோனை வடிவில் அமைந்த விடுகதையை விளக்குக.

18. குழந்தைகள் எவ்வாறு வளர்க்கப்பட வேண்டும் ? அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் ?

19. விதி பற்றியும், விதியை நம்புகிறவன் பற்றியும் பட்டுக்கோட்டையார் கூறும் கருத்துக்களை எழுதுக.

இ. எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை தருக : 3 × 2 = 6

20. பிரார்த்தனை பற்றி அப்துல் கலாமுக்கு அவர் தந்தை கூறியது யாது ?

21. எம்.ஐ.டி.யில் பொறியியல் படிப்பிற்காக அப்துல் கலாம் எவ்வாறு சேர்ந்தார் என்பதனை வரைக.

22. எஸ்.எல்.வி-3 திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் யாவை ?

23. அப்துல் கலாமின் பணி வாழ்க்கையில் இரண்டு முக்கியமான நாட்கள் யாவை ?

## பகுதி - III

அ. எவையேனும் **இரண்டிற்கு** இடஞ் சுட்டிப் பொருள் விளக்கம் தருக : 2 × 3 = 6

24. 'நிதந்தோறும் உணவின்றி வாடுவோர்க்கும்
நெஞ்சமதில் உவப்பளிக்கும் பாரத நாடு'

25. 'இம்மை செய்தன யானறி நல்வினை'

26. 'பார் சிறுத்தலிற் படை பெருத்ததோ
படை பெருத்தலிற் பார் சிறுத்ததோ'

ஆ. ஏதேனும் **ஒன்றிற்கு** இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக : 1 × 3 = 3

27. 'கூத்து பார்த்ததில் கண்ணுக்கும் காதுக்கும்
விருந்து பெற்றான்'

28. 'விண்ணைச் சிரிக்கச் செய்வாள்
கண்ணைப் பறிக்கச் செய்வாள்'

இ. ஏதேனும் **ஒன்றிற்கு** இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக : 1 × 3 = 3

29. 'அன்பைக் கலக்காமல் தயாரிக்கப்படும்
ரொட்டி சுவைக்காது. அது கசக்கும். ஒரு
மனிதனின் பாதிப் பசியைத்தான் அது போக்கும்'

30. 'உடைபற்றி ஒன்றும் கவலைப்படாதீர்கள்;
வெற்றி என்ற அழகான ஆடை தரித்திருக்கிறீர்கள் நீங்கள்'

## பகுதி - IV

அ. எவையேனும் **மூன்றிற்கு** ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை தருக : 3 × 5 = 15

31. பிரிவு உணர்த்திய தோழிக்குத் தலைவி கூறியதாக அமைந்த கபிலர் பாடலால் அறியப்படும் செய்தியை விளக்குக.
32. இனியவை கூறல் குறித்து வள்ளுவர் கூறியுள்ள செய்திகளைத் தொகுத்தெழுதுக.
33. மாடலன் கோவலனை இல்லோர் செம்மல் எனப் போற்றியதற்கான செயற்பாட்டை விளக்குக.
34. அழகிய சொக்கநாதப்பிள்ளை எழுதிய புதையல் என்ற தனிப்பாடலின் சிறப்புகளை எழுதுக.

ஆ. எவையேனும் **இரண்டிற்கு** ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை தருக : 2 × 5 = 10

35. கல்வி குறித்துத் திருவள்ளுவரும் அவ்வையாரும் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.
36. மங்கலப் பொருளான வெற்றிலை மருந்துப் பொருளாக விளங்குவதையும் விளக்குக.
37. பெண்மையைக் காக்கவும் மனையியற் கல்வி உதவும் விதம் பற்றி விளக்குக.

இ. எவையேனும் **இரண்டிற்கு** ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை தருக : 2 × 5 = 10

38. கணக்கு வாத்தியார் இராமகிருஷ்ண அய்யருக்கும் அப்துல் கலாமுக்கும் இடையே நடந்த நிகழ்ச்சியினைக் கூறுக.
39. சுவாமி சிவானந்தருக்கும் அப்துல் கலாமுக்கும் நிகழ்ந்த சந்திப்புப் பற்றி எழுதுக.
40. அப்துல் கலாம் தம் வாழ்க்கை வரலாற்றை எழுதியதற்குக் காரணங்களாக குறிப்பிடுவன யாவை ?

## பகுதி - V

அ. கீழ்க்காணும் பாடலின் பொருளை எழுதி, அணியை விளக்குக : 1 × 5 = 5

41. 'இட்டதோர் தாமரைப் பூ
இதழ்விரிந் திருத்தல் போலே
வட்டமாய்ப் புறாக்கள் கூடி
இரை யுண்ணும்'

ஆ. எவையேனும் **நான்கு** வினாக்களுக்கு மட்டும் விடை தருக : 4 × 2 = 8

42. பிரித்து எழுதுக :
    i) தமிழோசை
    ii) உண்மையொளி
43. சேர்த்து எழுதுக :
    i) தமிழ் + நூல்
    ii) கால் + ஊன்றி.
44. எதிர்ச்சொல் தருக :
    i) உண்மை ×
    ii) புண்ணியம் ×
45. வாக்கியத்தில் அமைக்க :
    i) பணிவுடையன்
    ii) நன்றி.
46. கோடிட்ட இடத்தை நிரப்பு :
    i) யாமறிந்த மொழிகளிலே .................. மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்.
    ii) உண்மை வெறும் .................. இல்லை.

## பகுதி - VI

அ. கீழ்வருவனவற்றுள் ஏதேனும் **ஒன்று** பற்றிக் கட்டுரை வரைக : 1 × 5 = 5

47. அன்றாட வாழ்க்கையில் கைப்பேசியால் ( மொபைல் போன் ) ஏற்படும் நன்மை, தீமைகளைப் பற்றி கட்டுரை வரைக.
48. வரதட்சணை கொடுமைகளும், ஒழிக்கும் வழிகளும் பற்றி கட்டுரை வரைக.

ஆ. கீழ்க்காணும் வினாக்களில் ஏதேனும் **ஒன்றிற்கு** விடை தருக : 1 × 5 = 5

49. உங்கள் குடியிருப்புப் பகுதிக்குக் குடிநீர் வசதி செய்து தரும்படி மாநகராட்சி ஆணையருக்குக் கடிதம் வரைக.
50. 'அய்ந்து வயதில் அண்ணன் தம்பி - பத்து
    வயதில் பங்காளி' என்ற பழமொழியை விளக்கி வாக்கியத்தில் அமைத்தெழுதுக.